# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2101/12 - 2018 දෙසැම්බර් මස 10 වැනි සඳුදා - 2018.12.10

*2101/12 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: MLB/LND/LNDAQ/L1/44-1.
காணி அமைச்சின் இல.: 4-3/9/2016/WS/519.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் மாலிம்படை பிரதேச செயலகப் பிரிவின் மாலிம்படை கிராமத்தில் அமைந்துள்ள, முற் பிரதிப்பட இலக்கம் மாற 2756 படத்தில் துண்டு இலக்கம் 1 எனக் காட்டப்பட்டுள்ள கீழ் குறித்த காணியை மாத்தறை iv ஆம் கட்ட நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் மாலிம்படை சுரங்க தாங்கியையும் மற்றும் விடுதியையும் அமைப்பதற்காக எடுத்துக்கொள்ள உத்தேசித்துள்ளது.

1. **துண்டு இல. *01***

காணியின் பெயர் : நாகந்தகொடஹேன ; விபரம் : தோட்டம் 30 வயதான கறுவா பந்தயம் உண்டு ; ஆரம்ப உரிமை கோருபவர் : திரு. வீ. எஸ். குமாரகே, டங்கி கடை, மாலிம்படை, பாலட்டுவ ; விஸ்தீரணம் : 0.4957 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மாலிம்படை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தீபிகா கே. குணரத்ன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி கொள்வனவு உத்தியோகத்தர்,
மாலிம்படை.

பிரதேச செயலகம்,
மாலிம்படை,
*2018, திசெம்பர் 26.*

*12 - 713*


1A - G 29068 - 17 (2018/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*